சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1975) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1975).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன் வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

@ 333-334 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 49/1975)

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1975 நவம்பர் 10

தமிழ் நாடு 1967 ஆம் ஆண்டு சட்ட மன்றச் (தகவின்மையைத் தவிர்த்தல்) (தமிழ் நாடு சட்டம் 3/1967) சட்டத்தைச் சேர்ந்த 2 ஆவது பிரிவின்படி, இச் சட்டத்தின் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பதவிகள் எவையும், அப் பதவி வகிப்பவர் சட்ட மன்ற உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு அல்லது உறுப்பினராயிருப்பதற்கு அவரைத் தகுதியற்றவராக்காது அல்லது அவரை அவ்வாறு தகுதியற்றவராக்கியுள்ளதாக எப்போதுமே கருதப்படக் கூடாது. தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழக இயக்குநர் பதவியும் தமிழ் நாடு சிறு தொழில் கழக இயக்குநர் பதவியும் மேற்சொன்ன விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆதாயமளிக்கும் பதவிகள் குறித்த இணைக்குழு தனது "ஐந்தாவது மக்களவை—பத்தாவது அறிக்கையில்" செய்துள்ள பரிவுரையின் அடிப்படையில், இவ்விரு கழகங்கள் தொடர்பான பதிவுகளை மேற்படி விவர அட்டவணையிலிருந்து நீக்கிவிட அரசு முடிவு செய்துள்ளது. இதே அறிக்கையில், மேற்படி இணைக் குழு செய்துள்ள பரிவுரையை அடிப் படையாகக் கொண்டு, மேற்சொன்ன விவர அட்டவணையில் கீழ்க்கண்ட நான்கு அமைப்புகளைச் சேர்த்துக் கொள்ளவும் அரசு முடிவெடுத்துள்ளது :—

1. தமிழ் நாடு உப்பு, உப்பு சார்ந்த இரசாயனப் பொருள்கள் வாரியம்.

2. கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூலின் ஆலைவாயில் விலை யையும், கிடங்குவாயில் விலையையும் நிர்ணயிக்கும் துணைக் குழு.

3. கூட்டுறவு நூற்பாலைகள் குறித்த மாநில ஆலோசனைக் குழு.

4. குடும்ப நலத் திட்டம் குறித்த நாடகக் கதை-வசனங்களையும், கலைஞர்களையும் தெரிந்தெடுக்கும் குழு.

தமிழ் நாடு கைவினைப் பொருள்கள் வளர்ச்சிக் கழக இயக்குநர் பதவி யையும் மேற்சொன்ன விவர அட்டவணையில் சேர்ப்பதென்று அரசு முடிவு செய் துள்ளது. அதற்கேற்ப, மேலவை முன் இப்போது வைக்கப்பட்டுள்ள இச் சட்ட முன்வடிவில் இது குறித்த விதித் துறைகள் அடங்கியுள்ளன. இத் தீர்மானத்தை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு இம் மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

1975 நவம்பர் 10]

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1975) நிறைவேற்றப் பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1975) நிறைவேற்றப் பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (பாதுகாத்தல், உற்பத்தி, பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1974)

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (பாதுகாத்தல், உற்பத்தி, பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

@ 334-353 ஆக அச்சிடப்பட்டுள்ளது. V ஆம் பக்கங்களில் இணைப்பு